Ontario

NEWS RELEASE

2012 ONTARIO BUDGET

MINISTRY of FINANCE

## ஒன்ராறியோவுக்கெனக் காத்திரமான நடவடிக்கை

*வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தி, வேலை வாய்ப்புக்களை உருவாக்கி, கல்வி மற்றும் உடல்நலப் பராமரிப்பைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*

**செய்தி** மார்ச் 27, 2012

2012 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டமானது, வரிகளை உயர்த்தாமல் வருமானங்களை 440 கோடி டொலரால் அதிகரிக்கும் அதேவேளை, அடுத்த மூன்று வருடங்களுக்குச் செயல் திட்டச் செலவு வளர்ச்சியைக் குறைத்து, செலவினங்களை 1770 கோடி டொலரால் கட்டுப்படுத்தும் ஒரு பற்றாக்குறை அகற்றல் திட்டத்தை உள்ளடக்குகின்றது.

இது ஒரு முக்கியமான காலகட்டத்துக்குரிய, ஒரு முக்கியமான நடவடிக்கை என்பதுடன், 2017-18 அளவில் பற்றாக்குறையை அகற்றி, ஒன்ராறியோவை சரியான பாதையில் இடுகிறது.

ஒன்ராறியோ அரசாங்கம் செலவழிக்கும் ஒவ்வொரு டொலரினதும் 50 சதவீதத்திற்கும் மேலான தொகை, ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொது சேவையிலுள்ள ஏனையோரது இழப்பீட்டுக்கெனக் கொடுக்கப்படுகிறது. மாகாணம் எதிர்கொள்ளும் முக்கிய நிதிச் சவால்களைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் தனது நிதி இலக்குகளை எய்தி, கடந்த எட்டு வருடங்களில் கல்வி மற்றும் உடல்நலப் பாரமரிப்பில் பெற்ற ஆதாயங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின், இழப்பீட்டுச் செலவுகள் சரிவர நிர்வகிக்கப்பட வேண்டும்

கூட்டுப் பேரம்பேசற் செயற்பாடு மதிக்கப்படும். வரவுசெலவைச் சமப்படுத்தி, முன்னுரிமைச் சேவைகளைப் பாதுகாப்பதில் திட்டத்துடன் ஒத்துப்போகும் உடன்பாடுகள் பேசித் தீர்க்கப்படாத தருணங்களில், அவசியமான நிர்வாக மற்றும் சட்ட நடவடிக்கைகளை முன்மொழிவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

பாதிக்கப்பட்டோருடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, வரிசெலுத்துவோருக்குப் பொதுத்துறை ஓய்வுதியங்களை மேலும் இயலுமானதாக்கவும், ஓய்வூதிய திட்ட உறுப்பினர்களுக்கு அதனை நின்று நிலைக்கக்கூடியதாக்கவும் என, பல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் எண்ணுகிறது. உதாரணமாக, ஓய்வூதியங்கள் பற்றாக் குறையாக இருக்கும் தருணங்களில், பொதுத் துறைப் பணியாட்கள், வேலை வழங்குவோரிடமிருந்து அல்லது அரசாங்கத்திடமிருந்து மேலதிக ஓய்வூதிய பங்களிப்புக்களை எதிர்பார்ப்பதற்கு முன்னர், எதிர்கால நலன்கொடுப்பனவுகளைக் குறைக்குமாறு கேட்கப்படுவர். தற்போது ஓய்வு பெற்றவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

2017-18 அளவில் வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தவென, பின்வருவன உட்பட, வலுவான நடவடிக்கையை 2012 வரவுசெலவுத் திட்டம் முன்மொழிகிறது.

- 490 கோடி டொலர் சேமிப்புக்களை மூன்று வருடங்களில் செயற்படுத்தல்

- அடுத்த வரவுசெலவுத் திட்டம் சமநிலைப் படுத்தப்படும்வரை, பொது நிறுவன வருமான வரிவீதத்தையும் வியாபாரக் கல்வி வரிவீதத்தையும் முடக்கி வைத்தல்
- மாதமொன்றுக்கு 3,000 கி.வாற்றில் Ontario Clean Energy Benefitஐ கட்டுப்படுத்தல்
- மிகவும் உயர்ந்த வருமானமுள்ள சுமார் ஐந்து சதவீத முதியோர், சிட்டையுடனான மருந்துச் செலவுக்கென அதிக பங்கைச் செலுத்தும் வகையில், Ontario Drug Benefit திட்டத்தை மாற்றியமைத்தல்
- செயல் திட்டங்கள், சேவைகளை வழங்குவதற்கான செலவுகளில் மேலும் பெருமளவை ஒன்ராறியோ பாவனையாளர் கட்டணம் மீட்டெடுப்பதை உறுதி செய்தல்
- மாகாண சட்டசபை உறுப்பினர்களின் ஊதிய முடக்கலை இன்னொரு இரண்டு வருடங்களுக்கு நீடித்தல் – மொத்தமாக ஒரு ஐந்து வருடங்களுக்கு
- மருத்துவமனைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பாடசாலைச் சபைகள், முகவர் நிலையங்கள் ஆகியவற்றின் உயரதிகாரிகளின் ஊதிய முடக்கலை இன்னொரு இரண்டு வருடங்களுக்கு நீடித்தல்

2011-12 ஆண்டுகளுக்கான பற்றாக்குறை 1530 கோடி ஊகிக்கப்படுகிறது. இது ஒரு வருடத்திற்கு முன்னர் எதிர்வு கூறப்பட்டதை விட 100 கோடி டொலர் குறைவானது. 2009 இலையுதிர் காலத்தில் எதிர்வு கூறப்பட்ட 2009-10 பற்றாக் குறையைவிட 38 சதவீதத்துக்கும் மேலாகக் குறைந்தது. 2012 வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்றி, 2014-15இல் ஒன்ராறியோவின் பற்றாக்குறை 2500 கோடி டொலரை அண்மிக்கும். பதிலாக, அந்த நிதியாண்டில் அது 1700 கோடி பில்லயனாக இருக்குமென ஊகிக்கப்படுகிறது.

பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்கான தனது முன்னுரிமைகளில் அரசாங்கம் தொடர்ந்து குறியாக இருக்கும்.

## வேலை வாய்ப்புக்களும் செழுமையும்

வியாபாரங்கள் புத்தாக்கங்களில் முதலீடு செய்வதற்கும், உற்பத்தித் திறனை முன்னேற்றுவதற்கும், உலகளாவிய ரீதியல் மேலும் போட்டியிடக் கூடியதாக்குவதற்கும் ஏற்ற வகையிலான ஒரு வலுவான, பரந்துபட்ட ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புவதற்குப் பின்வரும் வழிகளில் அரசாங்கம் உதவும்:

- 2014-15இல் 25 கோடி ஒட்டுமொத்த சேமிப்புகளை உருவாக்கும் அதேவேளை, உற்பத்தித் திறனிலும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் குறியாய் இருக்கும் ஒரு Jobs and Prosperity Fundல் பல வியாபார ஆதரவுச் செயல் திட்டங்களை ஒன்று சேர்க்கும்
- ஒன்ராறியோவின் உற்பத்தித் திறனைத் தூண்டி, ஒன்ராறியோவின் உற்பத்தித் திறன் மற்றும் புத்தாக்கம் மீதான ஒரு ஆய்வு நிகழ்ச்சி நிரலுக்கு இட்டுச் செல்வதற்கென ஒரு பன்முகப்பாங்கான Jobs and Prosperity Council ஐ உருவாக்குதல்
- சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளைக் கூர்மைப் படுத்தியும் ஒருங்கிணைத்தும், வளர்ந்துவரும் பொருளாதார நாடுகளுக்கு ஒன்ராறியோவின் ஏற்றுமதிகளை பரவலாக்குதல்

## அறிவும் வினைத் திறனும்

அறிவுசார் பொருளாதாரத்தின் எதிர்காலச் செழுமையை உறுதிசெய்யும் பொருட்டு, உலகின் மிகச் சிறந்த கல்விபெற்ற தொழிற் சக்தியைப் பெறுவதற்கான தனது திட்டத்தை, பின்வருவன ஊடாக அரசாங்கம் தொடர்ந்து கட்டி எழுப்பும்:

- செப்டம்பர் 2014 அளவில் முழுநேர பாலர் வகுப்பைப் பூரணமாக நடைமுறைப்படுத்தல்
- ஆரம்ப வகுப்புக்களின் எண்ணிக்கைய மட்டுப்படுத்தல்
- தகுதிபெற்ற முழுநேர முதற்பட்டப் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான 30% Off Ontario Tuition மானியக் கொடுப்பனவுக்கு தொடர்ந்து தயாராக இருத்தல்
- மேலும் இன்றைய வேலைவாய்ப்பு நிலைமைக்கு உகந்தவர்களாக அவர்களை ஆக்குவதற்கு அரசாங்கத்தினூடான பயிற்சித் திட்டங்களை ஒன்றிணைத்தல்.

…/3

## உடல்நலப் பராமரிப்பை மாற்றியமைத்தல்

ஒரு நின்று நிலைக்கக்கூடிய, உயர் ரக உடல்நலப் பராமரிப்புத் தொகுதியை உருவாக்குவதற்கென ஒன்ராறியோவின் உடல்நலப் பராமரிப்புச் செயல் திட்டத்தை அரசாங்கம் பின்வருவனவூடாகக் கட்டியெழுப்பும்:

- செலவினங்களின் வளர்ச்சி வீதத்தை அடுத்த மூன்று வருடங்களில் வருடாந்தம் சராசரி 2.1 சதவீதத்தால் குறைப்பதற்கென உடல்நலப் பராமரிப்பை மாற்றியமைத்தல்
- பொருத்தமான வேளைகளில், இலாப நோக்கற்ற சிகிச்சை நிலையங்கள், வீடுகள் போன்ற மாற்று சூழல்களில் நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதற்கு சமூக அடிப்படையான பராமரிப்பை மேம்படுத்தல்
- பாராமரிப்பின் பெறுமதியையும் தராதரத்தையும் உயர்த்தும் வகையில், நோயாளியை மையமாகக்கொண்ட நிதியளிப்பு மாதிரிகளை நோக்கி நகர்தல்.

## கூற்றுக்கள்

“ஒன்ராறியோ குடும்பங்கள் இயலுமான வகையில் மிகச் சிறந்த சேவைகளையும், வரிப் பணத்திற்கான மிகச் சிறந்த பெறுமானங்களையும் பெறுவதை உறுதிசெய்வதற்கான சரியான தேர்வை நாம் மேற்கொள்கிறோம். வரவுசெலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்துவதில் எங்கள் அனைவருக்கும் ஒரு பங்கு இருக்கிறது” – ட்வைற் டங்கன், நிதி அமைச்சர்

“வலுவான ஒன்ராறியோவைக் கட்டி எழுப்புதல் வலுவான நடவடிக்கையை வேண்டி நிற்கிறது. நாம் ஒன்றிணைந்து பெற்றுக்கொண்ட பிரதான ஆதாயங்களைப் பாதுகாப்பதற்கு நாம் சரியான தேர்வுகளை மேற்கொள்வோம். இந்த தேர்வுகளை நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு தடவையும், கல்வியையும் உடல்நலப் பராமரிப்பையும் பாதுகாப்பதையே தேர்வு செய்வோம்” – ட்வைற் டங்கன், நிதி அமைச்சர்

## விரைவான உண்மைகள்

- 2012 வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளின் பயனாக, 2014-15இல் ஒன்ராறியோவின் ஒருங்கு திரண்ட பற்றாக்குறையானது, நடவடிக்கை எடுக்காத நிலையிலும் பார்க்க, 22100 கோடி குறைவாக இருக்கும்.
- 2012 வரவு செலவுத் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட புதிய வருமானத்தின் ஒவ்வொரு டொலருக்கும், நான்கு டொலர் சேமிப்புக்களும், விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் இருக்கும்.
- நடவடிக்கை ஏதுமற்ற நிலைமையுடன் ஒப்பிடும்போது, அடுத்துவரும் மூன்று வருடங்களில், ஓர் ஒட்டு மொத்த 1770 கோடி டொலர் ஊடான செயல் திட்டச் செலவுக் குறைப்பு நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:
  - மேவுதல் மற்றும் இருமுறையாக்கல் அகற்றுதல், சிறப்பான வழங்கல் மாதிரிகளை நடைமுறைப்படுத்தல், பிரதான விடயங்களில் கவனஞ் செலுத்தல் என்பனவற்றின் ஊடான திட்டமிட்ட சேமிப்புகளிலிருந்து 490 ளேகாடி டொலர்.
  - பாடசாலைச் சபைகளுக்கான இழப்பீடுகளையும் வைத்தியர்கள், பொது சேவையிலுள்ள ஏனையோர் ஆகியோரது கொடுப்பனவுகளையும் கட்டுப்படுத்துவதற்கான அரச நடவடிக்கைகளில் 600 கோடி டொலர்
  - விரிவான பொதுச் சேவை ஊடாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த 680 கோடி டொலர

- ஒன்ராறியோவின் பொரளாதாரம் 2012இல் 1.7 சதவீதமும், 2013இல் 2.2 சதவீதமும், 2014இல் 2.4 சதவீதமும் வளருமென ஊகிக்கப்படுகிறது.
- 123,000 முழுநேர வேலைவாய்ப்பு அதிகரிப்புடன் 2011இல் 121,000க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் ஒன்ராறியோவில் உருவாக்கப்பட்டன.
- ஒன்ராறியோவின் கடன்களைச் பேணுவதற்குச் செய்யும் செலவு ஏறக்குறைய 100 கோடி டொலர். இது உடல்நலப் பராமரிப்பு, கல்வி என்பனவுக்கு அடுத்த மூன்றாவது மிகப் பெரிய வருடாந்தச் செலவு. இதைச் சரிக்கட்டவென, கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கான செவுகளைவிடக் கூடுதலான பணத்தை ஒன்ராறியோ வட்டியாகச் செலவழிக்கின்றது.
- பேணுதல் செலவான வட்டி வீதங்களின் ஒவ்வொரு ஒருசதவீத அதிகரிப்புக்கும் கடன் 467 மில்லியன் டொலரால் அதிகரிக்கிறது. வரவுசெலவைச் சமப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிடின், ஏறக்குறைய இன்று கல்விக்குச் செலவழிகும் தொகையை 2017-18இல் ஒன்ராறியோ கடன் பேணுதலுக்குக் கொடுக்கும்.
- செலவினங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிடின், 2017-18 அளவில் ஒன்ராறியோவின் பற்றாக்குறை 1600 கோடி டொலராகலாம் என Conference Board of Canada பெப்ரவரி 2012இல் ஆலோசனை கூறியது. அத்தகைய ஊகங்களை உபயோகித்து, பற்றாக்குறை 300 கோடி உயர்வடையலாம் என Reform of Ontario’s Public Services கணிப்பிட்டுள்ளது.
- 2011-12இல் ஒன்ராறியோவின் தனியாள் செயல்திட்டச் செலவினம் 8,560 டொலராக ஊகிக்கப்படுகிறது. இது மாகாணங்களுக்குள் ஆகக் குறைந்தது என்பதுடன் ஏனைய ஒன்பது மாகாண அரசாங்கங்களது சராசரிச் செலவைவிட 11 சதவீதம் குறைந்தது.
- மாகாணப் பொதுப் பணியாட்களின் ஆகக் குறைந்த தனியாள் இலக்கத்துடன் அரசாங்க சேவைகளை ஒன்ராறியோ வழங்குகிறது.

**மேலும் கற்றறிக**

ஒன்ராறியோ 2012 வரவுசெலவுத் திட்டத்தை வாசியுங்கள்.

ஒன்ராறியோவால் மேற்கொள்ளப்படும் செலவு நிர்வகிப்பு நடவடிக்கைகள் பற்றி மேலும் அறிந்து கொள்ளுங்கள்.

2012 ஒன்ராறியோ வரவு செலவுத் திட்டத்தின் பின்னணித் தகவல்களை வாசியுங்கள்
- ஒன்ராறியோவின் பொருளாதாரப் பார்வையும் நிதித் திட்டமும்
- பொதுச் சேவைத்துறை இழப்பீடு
- வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தல்
- நியாயமான, சாதுரியமான மருந்துத் திட்டம்

2012 வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய விடயங்களை வாசியுங்கள்.



**ஊடக விசாரணைகளுக்கு மட்டும்:**
Aly Vitunski, Minister’s Office, 416-325-9819
Scott Blodgett, Ministry of Finance, 416-325-0324

**ontario.ca/finance-news**
*Tamil*

**பொது விசாரணைகளுக்கு அழையுங்கள்:**
1-800-337-7222
செவிப்புலன் குறைபாடுடையோர்: 1-800-263-7776